




ISSN: 2582–5518

# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








வியாழன் ❖ ஆகஸ்ட். 03, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 300 ❖ ரூ.10


### என்எல்சி சேதப்படுத்திய பயிர்களுக்காக ஏக்கருக்கு ரூ.40,000

# இழப்பீடு

## கையகப்படுத்திய நிலத்தை பாதுகாக்க தவறியது என்எல்சி நிர்வாகத்தின் தவறு
## ஆக.6-க்குள் வழங்க அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

**சென்னை, ஆக. 3-**

**என்எல்சிநிர்வாகத்தால், விளைநிலங்களில் சேதப்படுத்தப்பட்ட பயிர்களுக்காக, ஏக்கருக்கு ரூ.40,000 இழப்பீட்டுத் தொகையாக நிர்ணயித்துள்ள சென்னை உயர் நீதிமன்றம், இந்தத் தொகையை வரும் ஆகஸ்ட் 6-ம் தேதிக்குள் வழங்க தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.**



கடலூர் மாவட்டம், நெய்வேலி என்எல்சி நிர்வாகம் இரண்டு சுரங்க விரிவாக்க பணிக்காக கரிவெட்டி, மேல்வளையமாதேவி, கீழ் வளையமாதேவி, ஆதனூர் உள்ளிட்ட கிராமங்களில் நிலங்களை 2007-ம் ஆண்டு கையகப்படுத்தியது. சம்பந்தப்பட்ட இடங்களில் வாய்க்கால் வெட்டும் பணியின்போது பயிர்கள் சேதப்படுத்தப்பட்டதற்கு எதிர்ப்பு வலுத்த நிலையில், சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர் அறுவடை செய்யப்படும் வரை விவசாயிகளுக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது என உத்தரவிடக் கோரி பாதிக்கப்பட்ட விவசாயி முருகன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், அறுவடைக்கு பின் நிலத்தை ஒப்படைத்து விடுவீர்களா?" என மனுதாரர் தரப்புக்கும், "கையகப்படுத்திய பின் நிலத்தில் சாகுபடி செய்ய ஏன் அனுமதித்தீர்கள்?" என என்எல்சி தரப்புக்கும் கேள்வி எழுப்பியிருந்தது. மேலும், சேதப்படுத்தப்பட்ட பயிர்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்து பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ய தமிழக அரசுக்கும், என்எல்சிக்கும் உத்தரவிட்டிருந்தது. அறுவடைக்கு பின் நிலத்தை ஒப்படைப்பது தொடர்பாக மனுதாரரும் உத்தரவாதம் வழங்க வேண்டும் என உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்திருந்தது.

இந்த வழக்கு நீதிபதி எஸ்.எம்.சுப்பிரமணியம் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது இருதரப்பிலும் உத்தரவாத மனுக்கள் தாக்கல் செய்யப்படன. அப்போது என்எல்சி தரப்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன், "தற்போது கால்வாய் தோண்டப்படும் நிலம், சுரங்கத்துக்கு மிக அருகில் அமைந்துள்ளது. இந்த நிலம் மிக முக்கியமான பகுதி. மழைக்காலத்தில், சுரங்கத்துக்குள் தண்ணீர் தேங்குவதைத் தடுக்க வேண்டும். அதற்காக பரவனாறை திசை மாற்றி அனுப்புவதற்காக இந்த கால்வாய் தோண்டப்படுகிறது.

இந்த திட்டத்துக்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு ஏற்கெனவே இழப்பீடு வழங்கப்பட்டுவிட்டது. சேதப்படுத்தப்பட்டுள்ள பகுதியை, தவிர்த்த கையகப்படுத்தியுள்ள மற்ற பகுதிகளில் பயிர்கள் அறுவடை செய்யும் வரை என்எல்சி தரப்பில் எந்த இடையூறும் கொடுக்கப்படாது. அதே நேரம், சம்பந்தப்பட்ட நிலங்களை செப்டம்பர் 15-ம் தேதிக்குள் என்எல்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

கால்வாய் வெட்டும் பணிக்காக சேதப்படுத்தப்பட்ட பயிர்களுக்காக, ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் வரை வழங்கப்படும். இந்த தொகை ஏற்கெனவே தமிழக அரசுக்கு டெபாசிட் செய்யப்பட்டுவிட்டது. பாதிக்கப்பட்ட விவசாயிகள் 88 பேர் உள்ளனர். அவர்களுக்கான 53 காசோலைகள் மாவட்ட நிர்வாகத்திடம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது அவை சிறப்பு தாசில்தார் வசம் உள்ளது" என்று தெரிவித்தார். அப்போது தமிழக அரசுத் தரப்பில், இந்த இழப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அப்போது மனுதாரர் தரப்பில், "ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு இழப்பீடாக நிர்ணயிக்கப்பட்ட ரூ.25 லட்சம் முழுமையாக வழங்கப்படவில்லை. மேலும், தற்போது இழப்பீடாகவழங்கப்படும் ரூ.30 ஆயிரம் என்பது மிகவும் குறைவானது. ஒரு ஏக்கருக்கு 60 மூடை நெல் விளையும். குறைந்தபட்சம் ரூ.1350 என்று நிர்ணயித்தால்கூட, 83 ஆயிரம் ரூபாய் ஒரு ஏக்கருக்கு வரும். அதன்படி, 83 ஆயிரம் ரூபாய் இல்லையென்றால்கூட, ரூ.50 ஆயிரமாவது இழப்பீடாக வழங்க உத்தரவிட வேண்டும்" என்று வாதிடப்பட்டது.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி பிறப்பித்த உத்தரவில், நிலம் கையகப்படுத்தப் பட்டுவிட்ட சூழலில், அந்த நிலத்தின் முன்னாள் உரிமையாளர்களான விவசாயிகளுக்கு அந்த நிலத்தில் எந்த உரிமையும் இல்லை. இருப்பினும், அந்த நிலத்தில் அவர்கள் விவசாயப் பணிகளை மேற்கொண்டது ஒரு அத்துமீறிய செயல். அதேபோல், கையகப்படுத்திய நிலத்தை பாதுகாக்க தவறியது என்எல்சி நிர்வாகத்தின் தவறு.

எனவே, இந்த விவகாரத்தில் இருதரப்பினரும் தவறு செய்துள்ளதால், ஏக்கருக்கு ரூ.40,000 இழப்பீட்டுத்தொகையாக நிர்ணயிக்கப்படுகிறது. இந்த இழப்பீட்டுத் தொகையைவரும் ஆக.6-ம் தேதிக்குள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

மேலும், செப்டம்பர் 15-ம் தேதிக்கு பின்னர் அந்த நிலத்தில் விவசாய பணிகள் எதுவும் மேற்கொள்ளக் கூடாது. கையகப்படுத்தப்பட்ட நிலத்தை என்எல்சி பாதுகாக்க வேண்டும். நிலத்தின் முன்னாள் உரிமையாளர்கள் சட்டம் - ஒழுங்கு பிரச்சினை ஏற்படுத்தினால் அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கலாம் என உத்தரவிட்டு, விசாரணையை ஆகஸ்ட் 7-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.



▶ தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச்செயலகத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 23 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 254 வாகனங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் வகையில் 10 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என்.நேரு, இ.பெரியசாமி, எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் ப.செந்தில்குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## எம்ஜிஆர் சிலை மீது பெயின்ட் ஊற்றியோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க அரசுக்கு இபிஎஸ் வலியுறுத்தல்

**சென்னை , ஆக. 3-**

"எம்ஜிஆர் சிலையின் மீது, பெயின்ட் ஊற்றிய கயவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, இதன் பின்னணியில் யார் யார் உள்ளனர் என்பதைக் கண்டுபிடித்து, அவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று தமிழக அரசுக்கு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.=



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மக்கள் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்பதற்காக, தன்னுடைய வாழ்க்கை முழுவதையும் மக்களுக்காகவே அர்ப்பணித்து, அனைவருடைய இதயங்களிலும் நீங்கா இடம்பெற்றிருப்பவர் அதிமுக நிறுவனத் தலைவர் எம்ஜிஆர். வட சென்னை தெற்கு (கிழக்கு) மாவட்டம், ராயபுரம் பகுதி, 51-ஆவது வட்டம், காளிங்கராயன் தெருவில் 1994-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட எம்ஜிஆரின் திரு உருவச் சிலையின் மீது நேற்று முன்தினம் நள்ளிரவு, விஷமிகள் பெயின்ட்டை ஊற்றி உள்ளனர். இச்செயல் மிகுந்த கண்டனத்துக் குரியதாகும். மேலும், இந்நிகழ்வு கோடான கோடி கழகத் தொண்டர்களின் மனதை வேதனை அடையச் செய்துள்ளது.

மக்கள் அனைவராலும் போற்றி வணங்கப்பட்டு வரும் எம்ஜிஆர் சிலையின் மீது பெயின்ட் ஊற்றிய கயவர்களை உடனடியாகக் கண்டுபிடித்து, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கட்சியின் அமைப்புச் செயலாளரும், வட சென்னை தெற்கு (கிழக்கு) மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஜெயக்குமார் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

திமுக அரசின் முதல்வர் மு.க ஸ்டாலின், மக்கள் நலனைக் காப்பதிலும், சட்டம் - ஒழுங்கை பாதுகாப்பதிலும் கவனம் செலுத்தாமல், தனது குடும்பத்தை வளப்படுத்துவதிலேயே முழு நேரத்தையும் செலவிட்டு வருவது நாடறிந்த உண்மை. முதல்வர் ஸ்டாலின் பொறுப்பில் உள்ள காவல் துறை, எம்ஜிஆர் சிலையின் மீது, பெயின்ட் ஊற்றிய கயவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, இதன் பின்னணியில் யார் யார் உள்ளனர் என்பதைக் கண்டுபிடித்து, அவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்" என்று அவர் கூறியுள்ளார்.

## அரியானா கலவரம் நீடிப்பு வன்முறை பரவுவதை தடுக்க டெல்லியில் போலீஸ் குவிப்பு

**புதுடெல்லி , ஆக. 3-**

அரியானா மாநிலம் நூ மாவட்டத்தில் திங்கள் கிழமை விஸ்வ இந்து பரிஷத் ஊர்வலம் நடந்தது. இதற்கு ஒரு தரப்பினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஊர்வலம் மீது சில மர்ம மனிதர்கள் கல்வீசியதால் இரு தரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அந்த மோதல் கலவரமாக வெடித்தது. கலவரத்தில் 2 ஊர்க்காவல் படை வீரர்கள் உள்பட 4 பேர் கொல்லப்பட்டனர். இந்த நிலையில் கலவரம் அருகில் உள்ள குருகிராம் மாவட்டத்துக்கும் பரவியது. அங்கு வீடுகள், வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. அங்கு ஒருவர் பலியானார். இதன் காரணமாக அரியானா வன்முறைக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 5 ஆக உயர்ந்தது. நேற்று பகலில் வன்முறை சம்பவங்கள் கட்டுப்படுத்தப்பட்டு இருந்த நிலையில் செவ்வாய்கிழமை இரவு சில இடங்களில் மீண்டும் வன்முறை தலைதூக்கியது.



நூ மற்றும் குருகிராம் மாவட்டங்களில் 144 தடை உத்தரவு அமல்படுத்தப்பட்டு உள்ள நிலையில் இணையதள சேவைகள் அனைத்தும் முடக்கப்பட்டுள்ளன. என்றாலும் செவ்வாய் இரவு சில இடங்களில் கடைகளுக்கு தீ வைப்பு சம்பவங்கள் நடந்தன. குருகிராம்-சோனா சாலையில் பல இடங்களில் தாக்குதல்கள் நடந்தன. குருகிராம் பத்சாப்பூரில் சாலையோர உணவகத்துக்கு தீ வைக்கப்பட்டது. அருகில் உள்ள மார்க்கெட்டில் இருந்த கடைகளும் அடித்து நொறுக்கப்பட்டன. குருகிராம் 70-வது செக்டார் பகுதிகளிலும் நேற்று இரவு பல கடைகள் சூறையாடப்பட்டன.

கலவரம் தொடர்பாக இரு மாவட்டங்களிலும் 90 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். 45 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கலவரத்தை கட்டுப்படுத்துவதற்காக இரு மாவட்டங்களில் பெட்ரோல்-டீசல் விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. குருகிராம் மாவட்டத்துக்கு கூடுதலாக போலீஸ் படை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. துணை நிலை ராணுவத்தினரும் மற்றும் அதிரடிப்படையினரும் முக்கிய இடங்களில் ரோந்து பணிகளில் ஈடுபட்டுள்ளனர். தனியார் நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் வீடுகளில் இருந்து பணியாற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அரியானாவில் ஏற்பட்டுள்ள வன்முறையால் டெல்லியில் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. டெல்லிக்குள் வன்முறை சம்பவங்கள் நிகழ்ந்து விடக்கூடாது என்பதற்காக போலீசார் முக்கிய இடங்களில் குவிக்கப்பட்டு உள்ளனர். சாலைகளில் வழக்கத்தை விட அதிகளவு போலீசார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.

பதட்டம் ஏற்படலாம் என்று கணக்கிடப்பட்டுள்ள டெல்லி மற்றும் டெல்லி புறநகர் பகுதிகளில் டிரோன்கள் மூலம் போலீசார் கண்காணித்து வருகிறார்கள். பல பகுதிகளில் துணைநிலை ராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளனர். பொதுமக்கள் தேவை இல்லாமல் சமூக வலைதளங்களில் வரும் வதந்தி தகவல்களை நம்ப வேண்டாம் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அரியானாவில் நிகழ்ந்த வன்முறை திட்டமிட்ட சதி என்று அம்மாநில முதல்-மந்திரி கட்டார் குற்றம் சுமத்தி உள்ளார். அவரிடம் நேற்று காலை மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். வன்முறை நடத்தி தங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக விஸ்வ இந்து பரிஷத்தும் குற்றம் சுமத்தி உள்ளது. தங்கள் மீதான தாக்குதலை கண்டித்து பாரத் பந்த் நடத்தப்போவதாக விஸ்வ இந்து பரிஷத் அறிவித்தது. இதையடுத்து வடமாநிலங்களில் பல இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு உள்ளன.

## ரோட்டரி சங்கம் சார்பில் உலக தாய்ப்பால் வார விழா

**புதுக்கோட்டை , ஆக. 3-**

உலக தாய்ப்பால் வார விழாவினை முன்னிட்டு புதுக்கோட்டை சென்ட்ரல் ரோட்டரி சங்கத்தின் சார்பாக காவேரி நகர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தாய்ப்பால் குறித்த விழிப்புணர்வு மற்றும் ஊட்டச்சத்து உணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.



இந்நிகழ்ச்சிக்கு சங்கத் தலைவர் பொறியாளர் கார்த்திகேயன் தலையேற்று வரவேற்புரையாற்றினார்.

காவேரி நகர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் மருத்துவ அலுவலர் டாக்டர். கோகுலவாணன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு கர்ப்பிணி தாய்மார்களிடம் தாய்ப்பால் குறித்த மகத்துவத்தையும், குழந்தைகளுக்கு தாய்ப்பாலின் அவசியத்தையும் எடுத்துக் கூறி உரையாற்றினார். பின்னர் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார்.

மேலும் இந்நிகழ்வில் ரோட்டரி துணை ஆளுநர் கதிரேசன், ரோட்டரி இணைச் செயலாளர் சிவாஜி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்டு கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து உணவுப்பொருட்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திட்ட தலைவர் ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட ரோட்டரி சங்கத்தினர், காவேரி நகர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் அலுவலர்கள் செய்திருந்தனர். நிறைவில் சங்க இணைச்செயலாளர் முனைவர்.சோமசுந்தரம் நன்றி கூறினார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

நம்மை நாம்
கேள்வி கேட்காதவரை..
நம் தவறுகளை
நாம் உணரபோவதில்லை...




# ஆடிப்பெருக்கை முன்னிட்டு மலர் சந்தைகளில் பூக்களின் விலை கிடுகிடு உயர்வு

சென்னை , ஆக. 3-

ஆடிப்பெருக்கு இன்று என்பதால் மலர் சந்தைகளில் பூக்களின் விலைநேற்றே கடுமையாக உயர்ந்துள்ளது. மதுரை, திண்டுக்கல், தோவாளை, தூத்துக்குடிக் மலர் சந்தைகளில் மல்லிகை, முல்லை, பிச்சிப்பூ ஆகியவற்றின் விலை பல மடங்கு அதிகரித்துள்ளது.

மதுரை மாட்டுத்தாவணி மலர் சந்தையில் மல்லிகைப்பூ. கிலோ ரூ.800க்கும்,



முல்லை கிலோ ரூ.7600-க்கும், பிச்சிப்பூ கிலோ ரூ.700க்கும், கனகாம்பரம் கிலோ ரூ.500க்கும், செண்டு கிலோ ரூ.100க்கும், தக்காளி ரோஸ் கிலோ ரூ.250க்கும், செவ்வந்தி ரூ.280க்கும், அரளிப்பூ ரூ.200க்கும், மரிக்கொழுந்து ரூ.100க்கும், வாடாமல்லி ரூ.100க்கும், கோழிக்கொண்டை ரூ.120க்கும் விற்பனை செய்யப்படுகிறது. ஆண்டிப்பட்டி மலர் சந்தையில் மல்லிகைப்பூ. கிலோ ரூ.700க்கும், முல்லை, பிச்சிப்பூ, கனகாம்பரம் உள்ளிட்டவை ரூ.500-க்கு விற்பனை செய்யப்படுகிறது. நேற்றைய விட இன்று இன்னும் அதிகரிக்கக்கூடும் என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கருணாநிதியின் 5-ம் ஆண்டு நினைவு தினம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைதி பேரணி

சென்னை , ஆக. 3-

மறைந்த முன்னால் முதல்-அமைச்சர் கருணாநிதியின் 5ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைதி பேரணி நடைபெற உள்ளது. இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

தலைவராக, எழுத்தாளராக, கவிஞராக, சொற்பொழிவாளராக, திரைக்கதை வசன கர்த்தாவாக, இலக்கியவாதியாக, திரைப்பட தயாரிப்பாளராக, தலைசிறந்த நிர்வாகியாக, தமிழகத்தின் 5 முறை முதலமைச்சராக, உலக தமிழர்களின் ஒப்பற்ற தலைவராகவிளங்கியவரும், அண்ணாவோடு தி.மு.க.வில் தொடர்ந்து பணியாற்றி அவரது மறைவுக்கு பின்னர்



தி.மு.க.வின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாக திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கி கொண்டவர் கருணாநிதி.

அவரின் 5-வது ஆண்டு நினைவு தினத்தையொட்டி தமிழ்நாடு முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின்தலைமையில் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மை செயலாளர், துணை பொதுச்செயலாளர்கள் உள்பட கட்சியின் முன்னணியினர் கலந்துகொள்ளும் அமைதி பேரணி வருகிற 7-ந்தேதி (திங்கட்கிழமை) காலை 8 மணிக்கு சென்னை அண்ணா சாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள கருணாநிதி சிலை அருகில் இருந்து புறப்படும்.

பின்னர் மெரினா காமராஜர் சாலையில் அமைந்துள்ள கருணாநிதி நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்படும். அமைச்சர்கள், மாவட்ட செயலாளர்கள், இந்நாள், முன்னாள் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், தலைமை கழக செயலாளர்கள், செயற்குழு-பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், மாநகராட்சிகவுன்சிலர்கள் மற்றும் தி.மு.க.வின் அனைத்து அணியினரும் கருணாநிதியின் நினைவை போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வர வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கோவை கார் குண்டு வெடிப்பு வழக்கில் மேலும் ஒருவர் கைது

கோவை , ஆக. 3-

கோவை உக்கடம் கோட்டை ஈஸ்வரன் கோவில் முன்பு கடந்த ஆண்டு அக்டோபர் 23-ந் தேதி கார் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இந்த குண்டு வெடிப்பிற்கு மூளையாக செயல்பட்ட அதே பகுதியை சேர்ந்த ஜமேஷா முபின் இதில் பலியானார். இந்த குண்டு வெடிப்பு சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. போலீசார் நடத்திய விசாரணையில் ஜமேஷா முபின், தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து கோவையில் பயங்கர நாச வேலைக்கு திட்டமிட்டது தெரியவந்தது. இந்த வழக்கில் தொடர்புடையதாக முகமது தல்கா, முகமது அசாருதீன், முகமது ரியாஸ், பெரோஸ் இஸ்மாயில், முகமது நவாஸ் இஸ்மாயில், அப்சர்கான் ஆகிய 6 பேரை போலீசார் கைது செய்தனர்.



இதற்கிடையே இந்த வழக்கு என்.ஐ.ஏ.வுக்கு மாற்றப்பட்டது. என்.ஐ.ஏ அதிகாரிகள் கோவையில் முகாமிட்டு தீவிர விசாரணை நடத்தி, உமர் பரூக், பெரோஸ்கான், முகமது தவுபிக் ஆகியோரையும் கைது செய்தனர். இதுவரை கார் குண்டு வெடிப்பு வழக்கில் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதையடுத்து கைது செய்யப்பட்ட 11 பேர் மீது அண்மையில் சென்னை பூந்தமல்லியில் உள்ள என்.ஐ.ஏ. சிறப்பு கோர்ட்டில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்தனர். இந்த நிலையில் கோவை கார் குண்டு வெடிப்பு வழக்கில் உக்கடம் ஜி.எம்.நகரை சேர்ந்த முகமது இத்ரீஸ்(வயது25) என்பவருக்கும் தொடர்பு இருப்பது அதிகாரிகளுக்கு தெரியவந்தது.

இதையடுத்து அதிகாரிகள் அவரிடம் 2 நாட்களாக விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில் முடிவில் நேற்று அவரை என்.ஐ.ஏ. அதிகாரிகள் அதிரடியாக கைது செய்தனர். தொடர்ந்து போலீசார் அவரை விசாரணைக்காக சென்னைக்கு அழைத்து சென்றனர். கார் வெடிப்பு சம்பவத்தில் பலியான ஜமேஷா முபினின் நெருங்கிய நண்பர் தான் தற்போது கைதாகி உள்ள முகமது இத்ரீஸ். இவர் குண்டு வெடிப்பிற்கு முன்பு அதற்கான குற்ற செயல்களில் ஈடுபட்டது தெரியவரவே அவரை என்.ஐ.ஏ. அதிகாரிகள் தங்கள் விசாரணை வளையத்திற்குள் கொண்டு வந்துள்ளனர். மேலும் அவரை தொடர்ந்து கண்காணித்தும் வந்தனர். குறிப்பாக கடந்த 3 ஆண்டுகளாக முகமது இத்ரீசின் செல்போன் அழைப்புகளை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். அதில் என்.ஐ.ஏ. அதிகாரிகளுக்கு சில ஆதாரங்கள் கிடைத்துள்ளன. மேலும் இந்த வழக்கில் ஏற்கனவே கைது செய்யப்பட்டவரிகளிடம் விசாரணை நடத்தியதிலும், முகமது இத்ரீசுக்கு குண்டு வெடிப்பு வழக்கில் தொடர்பு இருப்பது தெரியவந்தது.

இதன் காரணமாகவே அவருக்கு என்.ஐ.ஏ. அதிகாரிகள் நோட்டீஸ் அனுப்பி 2 நாட்களாக விசாரணை நடத்தியதும், விசாரணையின் முடிவில் அவரை கைது செய்ததும் தெரியவந்தது. இதற்கிடையே கைது செய்யப்பட்ட முகமது இத்ரீசை என்.ஐ.ஏ. அதிகாரிகள் நேற்று சென்னை பூந்தமல்லியில் உள்ள என்.ஐ.ஏ. சிறப்பு கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு.

அதன்பின்னர் அவர் ஜெயிலில் அடைக்கப்பட்டார். கைதான முகமது இத்ரீசிடம் மேற்கொண்டு விசாரணை நடத்தவும் என்.ஐ.ஏ. அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். அதற்கான நடவடிக்கைகளும் நடந்து வருகிறது. கோவை கார் குண்டு வெடிப்பு வழக்கில் ஏற்கனவே 11 பேர் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் 12-வது நபராக முகமது இத்ரீஸ் என்பவரும் கைதாகி உள்ளது இந்த வழக்கில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.






இலங்கை கிழக்கு மாகாண ஆளுநரின் ஊடக செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார் தமிழகத்தின் மூத்த ஊடகலாவியர் இந்திரசேனா அவருக்கு பணி ஆனையை இலங்கை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டைமான் வழங்கிய காட்சி,இந்திர சேனாக்கு ,தமிழ்நாடு புதுச்சேரி பிரஸ் மீடியா நிருபர்கள் சங்கம் மற்றும் புதுச்சேரி செய்தியாளர்கள் சங்கம் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்தனர்



மணிப்பூரில் கிறிஸ்தவர்கள் தாக்கப்பட்டதை கண்டித்து திருவள்ளூர் ரயில் நிலையம் அருகில் திருவள்ளூர் மாவட்ட அனைத்து கிறிஸ்தவர்கள் இணைந்து 300-க்கும் மேற்பட்டோர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். இந்த ஆர்பாட்டத்தில் தலைமை பிரான்சிஸ், கிளைமன்ட், அப்போஸ்தல் ஏ.தங்கச்சன், மேனியேஸ் மனோகரன், பால்பாண்டியன், சாமுவேல், மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர்கள் மைக்கல், சுரேஷ் ஜோஸ்வா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# பெரியபாளையம் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோவிலில் ஆடி மாத பௌர்ணமியை முன்னிட்டு விளக்கு பூஜை



ஊத்துக்கோட்டை, ஆக. 3-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையத்தில் உள்ள ஆரணி ஆற்றங்கரையில் பிரசித்தி பெற்ற அருள்மிகு பவானி அம்மன் திருக்கோவில் உள்ளது. இக்கோவிலில் ஆடித்திருவிழா துவங்கி நடைபெற்று வருகிறது.

இத்திருவிழா 14 வாரங்கள் நடைபெறும். இத்திருவிழாவுக்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், ஆந்திரா, கர்நாடகா, பாண்டிச்சேரி உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும், அமெரிக்கா, சிங்கப்பூர் உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இக்கோவிலுக்கு வந்து தங்களது நேர்த்தி கடனை செலுத்தி விட்டு செல்வர். இந்நிலையில், ஆடி மாத பௌர்ணமியை முன்னிட்டு நேற்று முன் தினம் இரவு இக்கோவிலில் விளக்கு பூஜை மற்றும் தேரில் பவானி அம்மன் உற்சவர் வெள்ளி கவசத்தில் பிரகார புறப்பாடு நடைபெற்றது.

எனவே, சுவாமிக்கு மகா அபிஷேகம், மகா அலங்காரம், மகா தீபாராதனை உள்ளிட்டவை நடைபெற்றது. இதன் பின்னர், நேற்று முன்தினம் இரவு 108 பெண் பக்தர்கள் கலந்து கொண்ட விளக்கு பூஜை மற்றும் உற்சவர் பவானி அம்மன் வெள்ளிக்கவசத்தில் தேரில் பிரகார புறப்பாடு வரும் நிகழ்ச்சி நடைபெற்றது. பூஜையின் நிறைவாக அனைத்து பெண் பக்தர்களுக்கும் மஞ்சள், குங்குமம் உள்ளிட்ட பிரசாதம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளில், சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோவிலின் பரம்பரை அறங்காவலர் அஞ்சன்லோகமித்ரா தலைமையில் திருக்கோவிலின் செயல் அலுவலர் பிரகாஷ் மற்றும் ஊழியர்கள், பணியாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

## கும்மிடிப்பூண்டி தொகுதியில்

# மதுரை மாநில மாநாட்டுக்கு வரவேற்பு அளிக்கும் விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்டும் நிகழ்ச்சி



ஊத்துக்கோட்டை, ஆக3-

மதுரையில் அதிமுக சார்பில் இம்மாதம் 20-ம் தேதி மாநில எழுச்சி மாநாடு நடைபெறுகிறது.

இந்நிலையில், இந்த மாநில மாநாட்டுக்கான பணிகளை இக்கட்சியினர் சிறப்பாக செய்து வருகின்றனர். இந்நிலையில், இக்கட்சியினரையும், பொது மக்களையும் வரவேற்கும் விதமாக மாநிலம் முழுவதும் விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்டும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், நேற்று திருவள்ளூர் வடக்கு மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதியில் உள்ள எளாவூர், பெத்திக்குப்பம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வாகனங்கள், கடைகள், பொது இடங்களில் மாநாட்டிற்கு வரவேற்கும் விதமாக ஸ்டிக்கர் ஒட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, திருவள்ளூர் வடக்கு மாவட்ட அம்மா பேரவை இணை செயலாளர் டி.முல்லைவேந்தன் தலைமை தாங்கினார். இதில், சிறப்பு அழைப்பாளர்களாக கும்மிடிப்பூண்டி ஒன்றிய பெருந்தலைவரும், திருவள்ளூர் மாவட்ட இளைஞரணி இணை செயலாளருமான கே.எம்.எஸ்.சிவக்குமார், கும்மிடிப்பூண்டி ஒன்றிய ஒன்றிய கழக செயலாளர் வி.கோபால்நாயுடு ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இதில், நிர்வாகிகள் கே.பி.ஆரோன், இ.எஸ்.ராமச்சந்திரன், எஸ்.சீனு, சிவா, சி.வளையாபதி, எஸ்.மனோஜ், பி.வெங்கடேசன், சிவா, மகி, நடராஜ் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகளும், அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திருவள்ளூர் வடக்கு மாவட்ட அம்மா பேரவை இணை செயலாளர் டி.முல்லைவேந்தன் சிறப்பாக செய்திருந்தார்.

# சீர்காழியில் மாணவர்களுக்கான இலவச பொது மருத்துவ முகாம்



சீர்காழி , ஆக3-

சீர்காழி சபாநாயக முதலியார் இந்து மேனிலைப் பள்ளியில் பயிலும் 2,000 க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு அனைத்து வகையான நோய்களைக் கண்டறியும் சிறப்பு பொது மருத்துவ முகாம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு பள்ளியின் செயலர் வி.சொக்கலிங்கம் தலைமை ஏற்க, டி.என்.சாய் கிருஷ்ணன் நிர்வாக இயக்குனர் எஸ்.கே.என் நிறுவனங்கள் முன்னிலை வகிக்க மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாமில் மருத்துவர்கள் டாக்டர்.எம்.ஸ்ரீநாத் , டாக்டர். எஸ்.பாரத், டாக்டர்.எஸ்.அருண் குமார், டாக்டர்.சி.அபிநயா, டாக்டர். எம். சுப்பிரமணியம், டாக்டர். சிவநேசன் மருந்தாளுநர்கள் மற்றும் மருத்துவ உதவியாளர்கள் 15க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிகிச்சை அளித்தனர்.

நிகழ்ச்சியில் 2000க்கும் மேற்பட்ட பயனாளிகள் பயன்பெற்றனர். பயனாளிகளுக்கு ஒரு லட்சம் ரூபாய் மதிப்புடைய மருந்து, மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன. நிகழ்ச்சியினை பள்ளி தலைமையாசிரியர் அறிவுடைநம்பி ஏற்பாடு செய்தார். உதவித் தலைமையாசிரியர் முரளிதரன் நன்றி கூறினார்.

# பவுஞ்சூரில் முகாம் செயலாளர்கள் நிர்வாகிகள் சந்திக்கும் கூட்டம்

செங்கல்பட்டு , ஆக. 3-

செங்கல்பட்டு மாவட்டம் விடுதலை சிறுத்தைகள் கட்சி செங்கல்பட்டு தெற்கு மாவட்ட புதிய செயலாளராக மு. தமிழினி பொறுப்பேற்றுக் கொண்டார் அதனைத் தொடர்ந்து மாவட்டத்திற்கு உட்பட்ட ஒவ்வொரு ஒன்றியமாக முகாம் செயலாளர்களை சந்தித்து வருகின்றார்.



அதன் தொடர்ச்சியாக இன்று இலத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட முகாம் செயலாளர்களை சந்திக்கும் கூட்டம் பவுஞ்சில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது இந்த கூட்டத்திற்கு முன்னாள் மாவட்ட செயலாளர் சூக. ஆதவன் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார்.

மேலும் நிகழ்ச்சிக்கு இலத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் நா.கார் வேந்தன் தலைமை தாங்கினார். ஒன்றிய பொருளாளர் சுபா. இளமாறன் வரவேற்பு உரை ஆற்றினார். நிகழச்சிற்க்கு ஒவியர் அரசு, செந்தமிழ் வளவன் கொடூர் மு.மணவாளன் , மீனவன் சந்தோஷ், வடக்குச் செய்யூர் சிற்றரசு, கா. சீனிவாசன், செங்காட்டூர் மதன், ஆகியோர் முன்னிலை வகித்தனர் இறுதியில் இளம் சிறுத்தைகள் எழுச்சி பாசறை ஒன்றிய துணை அமைப்பாளர் சரவணன் நன்றி உரையாற்றினார்.

## ஸ்ரீ பாஞ்சாலி அம்மன் திருக்கோயிலில்

# அக்னி வசந்த உற்சவ விழாவில் பாஞ்சாலி அம்மனுக்கு திருக்கல்யாண உற்சவம்

செங்கல்பட்டு, ஆக-03:

செங்கல்பட்டு மாவட்டம் அச்சரப்பாக்கம் அருகே உள்ள இந்தளூர் கிராமத்தில் உள்ள நூற்றாண்டுகள் பழமையான அருள்மிகு ஸ்ரீ பாஞ்சாலி அம்மன் திருக்கோயிலில் அக்னி வசந்த உற்சவ விழா கடந்த ஜூலை 20ஆம் தேதி விநாயகர் உற்சவத்துடன் தொடங்கியது.



ஆகஸ்ட் 1ஆம் தேதி நேற்று அர்ஜுனன் வில் வலைப்பு நிகழ்வு நடைபெற்றது. கோயிலின் வளாகத்தில் அர்ஜுனன் பாஞ்சாலிக்கும், சுபத்திரைக்கும் மாலையிடும் திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது.

இந்த உற்சவ விழாவில் கிராமப் பொதுமக்கள் திருக்கல்யாணத்திற்கு தேவையான சீர்வரிசைகளை ஊர்வலமாக கொண்டு வந்தனர். அதன் பின்னர், கல்யாணத்திற்கான யாகசாலையும் மற்றும் அர்ஜுனன் பாஞ்சாலிக்கும் சுபத்திரைக்கும் மாங்கல்யம் அணிவிக்கும் நிகழ்வு நடைபெற்றன. தொடர்ந்து திருக்கல்யாணத்திற்கு மொய் எழுதும் நிகழ்வும் பிரசாதமும், சுமங்கலி பெண்களுக்கு வளையல் சீப்பு கண்ணாடி மஞ்சள் குங்குமம் உள்ளிட்ட மங்களப் பொருட்களும் மற்றும் அன்னதானமும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு பாஞ்சாலி அம்மனை வழிபட்டு சென்றனர்.

## டாஸ்மாக் கடையில் மதுப்பிரியர்களால் ஏற்படும்

# சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளை சீர் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் - டிடிவி தினகரன்

சென்னை, ஆக- 03:

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், டாஸ்மாக் கடை மற்றும் அதன் அருகாமை பகுதிகளில் நடக்கும் சட்டம் ஒழுங்கு பிரச்னைகளால் டாஸ்மாக்பணியாளர்கள், பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலி மாவட்டம் வன்னிகோனேந்தல் பகுதியில் உள்ள டாஸ்மாக் கடையில் செவ்வாய் இரவு மதுவாங்கும் போது தகராறில் ஈடுபட்ட மதுப்பிரியர்கள் சிலர் கும்பலாக சேர்ந்து, டாஸ்மாக் விற்பனையாளரும் கழக தொழிற்சங்க உறுப்பினருமான பால்துரை, உதவி விற்பனையாளரும் கழக தொழிற்சங்க உறுப்பினருமான பாலமுருகன் ஆகியோரை அரிவாளால் கொடூரமாக தாக்கியதாக வெளியான தகவல் அதிர்ச்சியளிக்கிறது.



படுகாயம் அடைந்த டாஸ்மாக் பணியாளர்கள் இருவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் டாஸ்மாக் கடைகள் மற்றும் பார்களுக்கு வரும் மதுபிரியர்களால் ஆங்காங்கே இது போன்ற சட்டம் ஒழுங்கு பிரச்னைகள் அதிகரித்திருப்பதை திமுக அரசு கண்மூடித்தனமாக வேடிக்கை பார்த்து வருவது ஏற்கதக்கதல்ல.

மது விற்பனையை மட்டும் அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கும் அரசு, அதில் பணியாற்றும் அரசு ஊழியர்களை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்காதது கண்டிக்கத்தக்கதாகும். இனியும் தாமதிக்காமல் டாஸ்மாக் கடையில் மதுப்பிரியர்களால் ஏற்படும் சட்டம் ஒழுங்கு பிரச்னைகளை சீர் செய்ய தமிழ்நாடு அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன். அதே நேரத்தில் படுகாயம் அடைந்த டாஸ்மாக் பணியாளர்கள் இருவரும் விரைவில் குணம் பெற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன். இவ்வாறு அதில் பதிவிட்டுஇருந்தர்

# சுருக்கு மடி வலைக்கு தீர்வு காண 6 மாவட்டங்களை ஒருங்கிணைத்து ஆர்ப்பாட்டம்

## தரங்கம்பாடி மீனவர் ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்



தரங்கம்பாடி, ஆக-03:

தரங்கம்பாடியில் 19 மீனவ கிராம ஆலோசனைக் கூட்டத்தில் சுருக்குமடி வலைக்கு தீர்வு காண ஆறு மாவட்டங்களை ஒருங்கிணைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மயிலாடுதுறை மாவட்ட கடலோரக் கிராம மீனவர்கள் சுருக்குமடி வலையை பயன்படுத்தி மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் பூம்புகாரில் இருந்து 11 விசைப்படகுகள் புதுச்சேரிக்கு கொண்டு செல்லப்பட்டு சுருக்குமடி வலை மூலம் மீன்பிடி தொழில் மேற்கொள்ளப்படுகிறது. அதில் ஒரு படகு திங்கள்கிழமை மயிலாடுதுறை கடல் எல்லைக்குள் வந்து மீன்பிடித்ததாகவும், அந்த மீனை சந்திரபாடி மீனவர்கள் எடுத்து வந்ததாகவும் குற்றச்சாட்டு எழுந்தது.

இந்நிலையில் கடலிலிருந்து கரைக்கு திரும்பிய சந்திரபாடி கிராமத்தின் பைபர் படகு மற்றும் அதில் வந்த மீனவர்களை தரங்கம்பாடி மீனவர்கள் சிறை பிடித்தனர். போலீசார் மீனவர்களை மீட்ட நிலையில் படகை தரங்கம்பாடி மீனவர்கள் விடுவிக்காமல் அதிலிருந்து மீன்களை ஏலம் விட்டனர். இதற்கு சந்திரபாடி கிராம மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். சுருக்குமடி வலையை முழுமையாக தடை செய்ய வலியுறுத்தி தரங்கம்பாடி தலைமையிலான 21மீனவ கிராமங்கள் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் மயிலாடுதுறை மாவட்ட கடலோர கிராமங்களில் பதட்டமான சூழல் உருவாகியுள்ளது. இந்நிலையில் தரங்கம்பாடியில் நேற்று மாலை சுருக்குமடி வலை தொடர்பாக 19 மீனவ கிராம நிர்வாகிகளின் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் சுருக்கு மடி வலை சம்பந்தமாக அனைத்து கிராமங்களின் முடிவின்படி விரைவில் ஆர்ப்பாட்டம் நடத்துவது. அதற்காக ஆறு மாவட்டங்களை ஒருங்கிணைப்பது. தீர்வு கிடைக்கும் வரை மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து மீனவர் கிராமங்களும் தொழில் விடுமுறை விடுவது என தீர்மானிக்கப்பட்டது.

## ஊத்துக்கோட்டையில் பள்ளி மாணவர்களுக்கு

# விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ பங்கேற்பு



ஊத்துக்கோட்டை, ஆக3-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், ஊத்துக்கோட்டையில் உள்ள அரசினர் ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் 366 மாணவர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி ஊத்துக்கோட்டை பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நேற்று காலை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, பெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர்கள் சம்சுதீன், தமிழ்ச்செல்வன் ஆகியோர் தலைமை தாங்கினர். இதில், முன்னாள் மாவட்ட கவுன்சிலர்கள் பி.ஜே.மூர்த்தி, டி.கே.சந்திரசேகர், ஊத்துக்கோட்டை பேரூராட்சிமன்ற தலைவர் அப்துல்ரஷீத், துணைத்தலைவர் குமரவேல், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் அபிராமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், கும்முடிபூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே.கோவிந்தராஜன் கலந்து கொண்டு ஊத்துக்கோட்டை அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் 164 மாணவர்களுக்கும், பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் 202 மாணவிகளுக்கும் என மொத்தம் 366 மாணவர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி கல்வித்துறைக்கு தமிழக அரசு செய்து வரும் பல்வேறு வகையான பணிகளை பட்டியலிட்டு சிறப்புரையாற்றினார்.

இதில், எஸ்.எம்.சி தலைவர்கள் சமீமாரஹீம், கீதாலோகேஷ் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகளும், அணிகளின் அமைப்பாளர்களும், கட்சியின் முக்கிய பிரமுகர்களும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளும், இருபால் ஆசிரியர்களும், பெற்றோர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர். முன்னதாக, அனைவரையும் தலைமை ஆசிரியர்கள் வித்யாவதி, செந்தில்வேலன் ஆகியோர் வரவேற்றனர். முடிவில், உதவி தலைமை ஆசிரியர் சையத்பாத்திமா நன்றி கூறினார்.

# சுருளி அருவிக்கு செல்லும் வழியில் யானைகள் முகாம் : சுற்றுலா பயணிகள் குளிக்கத்தடை



தேனி, ஆக3-

தேனி மாவட்டம் கம்பம் அருகே சுருளி அருவி உள்ளது. இந்த அருவிக்கு ஹைவேவிஸ் தூவானம் அணையில் இருந்து நீர்வரத்து ஏற்படும். இங்கு தினமும் தேனி மாவட்டம் மட்டுமின்றி வெளி மாவட்டங்கள் மற்றும் அண்டை மாநிலமான கேரளாவில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். தற்போது அருவியின் நீர்ப்பிடிப்பு பகுதியில் சாரல் மழை பெய்வதால் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.

இந்த நிலையில் அருவிக்கு செல்லும் வழியில் யானைகள் அதன் குட்டிகளுடன் முகாமிட்டுள்ளன. இதன் காரணமாக சுருளி அருவியில் குளிப்பதற்கு வனத்துறையினர் தடை விதித்துள்ளனர். இதனால் சுற்றுலா பயணிகள் வருத்தமடைந்துள்ளனர். இயல்பு நிலை திரும்ப வேண்டும் என சுற்றுலா பயணிகள் விரும்புகின்றன.

## வேம்பேடு கிராமத்தில் சவுடுமண் குவாரி உரிமையாளரை

# அடியாட்களுடன் சென்று மிரட்டிய பகுஜன் சமாஜ் கட்சி மாவட்ட தலைவர் சிறையில் அடைப்பு

ஊத்துக்கோட்டை, ஆக3-

திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஒன்றியம், மெய்யூர் ஊராட்சியில் உள்ள வேம்பேடு கிராமத்தில் திருவள்ளூர் மாவட்ட கனிமவளத்துறை அனுமதியுடன் சவுடு மண் குவாரி ஒன்று இயங்கி வருகிறது.

இதனை எல்லாபுரம் ஒன்றியம், வடமதுரை ஊராட்சி, எர்ணாகுப்பம் கிராமம், யாதவர் தெருவில் வசித்து வரும் ஊராட்சி மன்ற தலைவர் காயத்ரியின் கணவரும் முன்னாள் ஊராட்சிமன்ற தலைவருமான கோதண்டன் (வயது36) என்பவர் நடத்தி வருகிறார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை இந்த சவுடு மண் குவாரிக்கு கீழானூர் ஊராட்சிமன்ற தலைவர் உஷா என்பவரது கணவரும், பகுஜன் சமாஜ் கட்சியின் திருவள்ளூர் மேற்கு மாவட்ட தலைவருமான பிரேம்குமார் என்ற



கீழானூர் பிரேம் என்பவர் தனது அடியார்கள் 10 பேருடன் இந்த குவாரிக்கு வந்தாராம். அங்கிருந்த குவாரி உரிமையாளர் கோதண்டனிடம் நான் எவ்வளவு பெரிய ரவுடி தெரியுமா? எனது லாரிகளுக்கு இலவசமாக சவுடு மண் போட முடியாதா? எனக்கு மாமுல் தரமாட்டியா? என்று கூறி மிரட்டினாராம்.

மேலும், தான் மறைத்து வைத்திருந்த கத்தியை காட்டி உனது தலை இருக்காது ஜாக்கிரதை என்று மிரட்டல் விடுத்தாராம். இந்தச் சம்பவம் குறித்து கோதண்டன் நேற்று முன்தினம் இரவு பெரியபாளையம் காவல் நிலையத்தில் புகார் செய்தார். எனவே, போலீசார் இந்தச் சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்தனர்.

மேலும், குற்றவாளி பிரேம்குமார் என்ற கீழானூர் பிரேம் என்பவரை நேற்று காலை கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்தனர். பின்னர் அவர் மீது வழக்கு பதிவு செய்து ஊத்துக்கோட்டை முதல் நிலை குற்றவியல் நீதிமன்ற மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

பின்னர், அவரது உத்தரவின் பேரில் போலீசார் குற்றவாளியை புழல் மத்திய சிறையில் அடைத்தனர். இச்சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சீர்காழி அருகே அரசு அலுவலங்களுக்கு செல்ல 20 கிமீ சுற்றிவரும் கிராம மக்கள்: உடைந்து தொங்கும் பாலத்தை ஆபத்தான முறையில் கடக்கும் அவலம்







சீர்காழி, ஆக,3

சீர்காழி அருகே புதுத்துறை ஊராட்சிக்கு உட்பட்ட வெள்ளை பள்ளம் கிராமத்தில் 200 குடும்பத்தைச் பொதுமக்கள் வசித்து வருகின்றனர்.

இந்த வெள்ளை பள்ளம் கிராமம் உப்பனாறு இடது கரையில் அமைந்துள்ளது. மக்கள் தங்கள் அன்றாட தேவைகளுக்காக கிராம நிர்வாக அலுவலகம், ஊராட்சி மன்ற அலுவலகம், காவல் நிலையம் மற்றும் கல்லூரி ஆகியவற்றிற்கு செல்ல வெள்ளப்பள்ளம் உப்பனாற்றில் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் கட்டப்பட்ட பாலம்.

அதாவது மேலே மக்கள் பயன்படுத்தும் வகையிலும், ஆற்றின் கீழே வெள்ளப்பள்ளம் கிராமத்திற்கு நீர் பாசனம் பெருந்தகையில் அமைக்கப்பட்டு இருந்த பாலம் பழுதடைந்ததால் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு சிறிய அளவில் இரும்பு கேடர் அமைத்து பாலத்தின் வழியாகவே வெள்ள பள்ளம் கிராம மக்கள் புதுத்துறை ஊராட்சிக்கு மற்றும் புதுத்துறை வழியாக திருவெண்காடு பூம்புகார் உள்ளிட்ட பகுதிகளுக்கும் சென்று வந்தனர்.

இந்த ஆற்று பாலம் தற்போது முழுவதும் சேதமடைந்து பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவசர தேவைக்கு கடந்து செல்லும் போது தவறி விழுந்ததாகவும் கூறுகின்றனர்.

பொதுமக்கள் மற்றும் கல்லூரி மாணவர் ஆபத்தான முறையில் பாலத்தைக் கடந்து செல்கின்றனர். இல்லாவிட்டால் சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் சுற்றிக்கொண்டு புதுத்துறை மற்றும் பிற பகுதிகளுக்கு செல்லும் நிலை உள்ளது. இதனால் இந்தப் பகுதியில் புதிதாக பாலம் கட்டித் தரவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அதோடு வெள்ளம் பள்ளம் பகுதியில் உள்ள குளம் தூர்வாரப்பட்டு பல ஆண்டுகள் ஆவதால் கால்நடைகளுக்கும் பொதுமக்கள் குளிப்பதற்கும் தண்ணீர் இல்லாத சூழல் உள்ளது.

கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் மூலம் வாரத்திற்கு ஒருமுறை மட்டுமே இந்த கிராமத்திற்கு தண்ணீர் வருவதால் இப்பகுதி மக்கள் அந்த தண்ணீரைப் பிடித்து தாங்கள் அன்றாட தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தி வருகின்றனர். சில நாட்களுக்கு பிறகுதான் குளிப்பதாகவும் கால்நடைகளுக்கு தண்ணீர் இல்லாததால் மாடுகள் அருகில் உள்ள கிராமங்களுக்கு மேய்ச்சலுக்கு சென்று விடுவதாகவும் அந்த கிராம மக்கள் கால்நடைகளை கட்டி வைத்துவிட்டு கால்நடைகளை விடுவிக்க அபராத தொகை கேட்பதாகவும் வெள்ள பள்ளம் கிராம மக்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர்.

கிராமத்திற்கு திருவாலி ஏரியிலிருந்து வரும் பிரதான நீர் குமிழிக்கு தண்ணீர் வரும் பாதையும் தற்போது புதுத்துறை ஊராட்சியில் கட்டப்பட்டு வரும் கதவணையினால் தடைபட்டுள்ளதாகவும் இதனால் வெள்ளை பள்ளத்தில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் மிகவும் வேதனை தெரிவிக்கின்றனர்.


ஆகையால் அத்திப்பட்டி போல் தனித்துவிடப்பட்ட வெள்ளை பள்ளம் கிராமத்திற்கு குடிநீர் வசதி அன்றாடம் கிடைக்கவும் குளத்தை தூர்வாரவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அதிபர் தேர்தல் முடிவுகளை மாற்ற முயன்றதாக டிரம்ப் மீது குற்றச்சாட்டு பதிவு

வாஷிங்டன், ஆக- 03:

2020 ம் ஆண்டு நடந்த அமெரிக்க அதிபர் தேர்தல் முடிவுகளை மாற்றியமைக்க முயன்றதாக, முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு உள்ளது.

அமெரிக்காவை ஏமாற்றும் நோக்கில் சதி செய்தல், அதிகாரப்பூர்வ நடவடிக்கைகளுக்கு இடையூற செய்தல், அதிகாரப்பூர் நடவடிக்கைகளை தடுக்க சதி செய்தல், அரசியலமைப்பினால் வழங்கப்பட்ட உரிமைகளை ஒருவர் நிறைவேற்ற முயற்சி



செய்வதை தடுக்க சதி செய்தல் என 4 பிரிவுகளின் கீழ் குற்றம்சாட்டப்பட்டு உள்ளது.

இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையில், ஜோ பைடனுக்கு கிடைக்கவிருந்த ஓட்டுகளை தனதாக்கி கொள்ள தேர்தல் அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்க ஒரு வார காலம் இந்த சதிக்கான திட்டம் தீட்டப்பட்டதாக அதில் கூறப்பட்டு உள்ளது.

டிரம்ப்புடன் சேர்ந்து சதி செய்ததாக பெயர் வெளியிடப்படாத 6 பேர் மீது குற்றம்சாட்டப்பட்டு உள்ளது. அவர்கள் மீது எந்த குற்றச்சாட்டும் பதிவாகவில்லை.

இது தொடர்பாக டிரம்ப் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது: 2024 தேர்தல் பிரசாரத்திற்கு நான் செல்வதை தடுக்கும் விதமாக தீய எண்ணத்துடன் முயற்சி நடக்கிறது என தெரிவித்துள்ளார்.

# ஆலங்குடி நாடியம்மன் கோவில் மதுஎடுப்பு திருவிழா



ஆலங்குடி,ஆக.03-

ஆலங்குடி நாடியம்மன் கோவில் ஆடி திருவிழாவை முன்னிட்டு மதுஎடுப்பு திருவிழா நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் அமைந்துள்ள நாடியம்மன் கோயில் அப்பகுதியில் உள்ள பிரசித்தி பெற்ற கோவிலாகும்.. இக்கோவில் திருவிழா ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் நடைபெறுவது வழக்கம். இக்கோயிலில் கடந்த 15 நாட்களுக்கு முன்புகாப்புகட்டுதலுடன் திருவிழா தொடங்கியது. விழாவினையொட்டி நாடியம்மனுக்கு சிறப்பு அபிஷேக பூஜைகள் நடைபெற்று வந்தன, திருவிளக்கு பூஜை நடைபெற்றது .

விழாவில் 301 பெண்கள் பங்கேற்று விளக்கேற்றி வேத மந்திரங்கள் முழங்க சிறப்பு கூட்டு வழிபாடு செய்தனர், விழாவின் முக்கிய நிகழ்வாக மதுஎடுப்பு திருவிழா நேற்று நடைபெற்றது. ஆலங்குடியை சுற்றியுள்ள கிராம பகுதிகளில் இருந்து பெண்கள் அலங்கரிக்கப்பட்ட மதுகுடங்களை ஊர்வலமாக எடுத்துவந்தனர். கோவிலை அடைந்தபின் எடுத்துவந்த மதுகுடங்களை சுவாமிக்கு வைத்து வழிபட்டனர், சுவாமி நாடியம்மனுக்கு மஹா தீபாராதனை நடைபெற்றது, மேலும் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது, மதுஎடுப்பு திருவிழாவில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

# அவதூறான கருத்துகளை பரப்பலாமா? அண்ணாமலைக்கு கே.எஸ்.அழகிரி கண்டனம்



சென்னை ,ஆக.3-

தமிழக அரசு மீது திட்டமிட்டு அவதூறு பரப்பும் பாஜக மாநில தலைவர் அண்ணாமலைக்கு காங்கிரஸ் கட்சி தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

தமிழக காங்கிரஸ் கட்சி தலைவர் கே.எஸ். அழகிரி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

நடைபயணத்தில் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை பேசும்போது, பல்வேறு ஆதாரமற்ற அவதூறுகளை அள்ளி வீசி வருகிறார். தமிழக அரசின் கடனை குஜராத் அரசோடு ஒப்பிடுகிறார். அண்ணாமலையின் முதுகு அவருக்கு தெரியாது.ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு 9 ஆண்டுகளில் ரூபாய் 100 லட்சம் கோடி கடன் உயர்ந்திருக்கிறது என்பதை அண்ணாமலை அறிவாரா?

தமிழகத்தில் கடன் யார் ஆட்சியில் எவ்வளவு அதிகரித்தது என்பதை அரைகுறை அண்ணாமலை ஆய்வு செய்யாமல் அவதூறான கருத்துகளை பரப்பலாமா? 2001 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியிலிருந்து வெளியேறும்போது 34,540 கோடி ரூபாயாக இருந்த தமிழகத்தின் கடன் அளவு 2006 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக்காலம் நிறைவடையும்போது 63,848 கோடி ரூபாயாக அதிகரித்திருந்தது. 5 ஆண்டு காலத்திற்குள் கடன் அளவு சுமார் 84% அதிகரித்தது. இதை அண்ணாமலையால் மறுக்க முடியுமா? இவ்வாறுதமிழககாங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி கூறியுள்ளார்.

# பொதுப்பாடத்திட்டத்தை மாற்ற உயர் கல்வித்துறைக்கு அதிகாரம் உள்ளது அமைச்சர் பொன்முடி



சென்னை ,ஆக.3-

பொது பாடத்திட்டத்தை கல்லூரி முதல்வர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். பொது பாடத்திட்டத்தால் எந்த பிரச்சனையும் இல்லை என உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி தெரிவித்தார். சென்னையில் செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் கூறியதாவது:-

பொது பாடத்திட்டத்தை கல்லூரி முதல்வர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். பொது பாடத்திட்டத்தால் எந்த பிரச்சனையும் இல்லை.அனைவரிடமும் ஆலோசித்து தான் முடிவு எடுக்கப்பட்டது. இதில் எவ்வித பிரச்சனையும் இல்லை. பொதுப்பாடத் திட்டத்தை மாற்ற உயர் கல்வித்துறைக்கு அதிகாரம் உள்ளது.

உயர்கல்வியின் வளர்ச்சியே எங்களுக்கு நோக்கம். கல்வியாளர்களை கலந்தாலோசிக்காமல் முடிவு எடுத்ததாக எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார். எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கும் விளக்கம் அளிக்க தயாராக இருக்கிறேன். பொறியியல் முதற்கட்ட கலந்தாய்வில் இதுவரை 16,516 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். கல்வி வளர்ச்சி என்பது எண்ணிக்கையில்மட்டுமே உயர்த்தப்படுவதில்லை. கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும். நான் முதல்வன் திட்டம் மூலம் கல்வியின் தரத்தை உயர்த்தி வருகிறோம் என்று உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறினார்.



தென்காசி மாவட்டம் குற்றாலம் செல்லும் சாலையில் உள்ள தனியார் மண்டபத்தில் கட்டுமானம் மற்றும் அனைத்து தொழில் கூட்டமைப்பு சார்பில் நிர்வாகிகளுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கட்டுமான தொழில் தற்போதைய சூழலில் எவ்வாறு உள்ளது, கட்டிடக்கலையும் தமிழர் பண்பாடும் உள்ளிட்டவைகள் குறித்து நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது. இந்த இரண்டு நாட்கள் நடக்கக்கூடிய பயிற்சி முகாமை தமிழக அரசின் பேரவை தலைவர் மு.அப்பாவு தொடங்கி வைத்தார், மேலும் இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார், தென்காசி திமுக மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன், நகர் மன்றத் தலைவர் சாதிர், மாநில செயற்குழு உறுப்பினர் செரீப், சேக் அப்துல்லா, பணகுடி அசோக் குமார், தமிழ்வாணன், ஒன்றிய குழு துணைத் தலைவர் ஐவேந்திரன் தினேஷ், வேலுச்சாமி கருப்பண்ணன், குத்தாலம் குமார், செங்கோட்டை நகர செயலாளர் ரஹீம், ஆகியோர்கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தென்காசி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சுன்சோங்கம் ஜடக் சிரு தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் துரை. இரவிச்சந்திரன் முன்னிலையில், கலைஞரின் மகளிர் உரிமைத் தொகை திட்டம் தொடர்பான பணி முன்னேற்றம் குறித்த ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

# சங்கரன்கோவில் ஆடித்தவசு திருவிழாவை முன்னிட்டு அன்னதானம்

## வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ துவக்கி வைத்தார்



சங்கரன்கோவில். ஆக.3-

சங்கரன்கோவில் சீனியர் சேம்பர் இன்டர்நேஷனல் அமைப்பின் சார்பில் ஆடித்தபசு திருவிழாவை முன்னிட்டு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது, நிகழ்ச்சிக்கு இந்தஅமைப்பின்தலைவர் சுப்பிரமணியன் தலைமை வகித்தார் .செயலாளர் சுப்பிரமணியன் ,துணைச் செயலாளர் வக்கீல் கணேசன், பொருளாளர் செல்வகுமார் ,வக்கீல் முத்துராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்துகொண்டு அங்குள்ள கோயிலில் வழிபாடு செய்து அன்னதானத்தை துவக்கி வைத்தார், இதில் திமுக மாவட்டப் பொருளாளர் சரவணன், நகர செயலாளர் பிரகாஷ் மற்றும் கணேசன், ஆறுமுகம் , பாலகுரு, கமல்குமார் ,ராஜ்குமார் மாரியப்பன் பூபாலன் பிரகாஷ் ஜெயக்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# புளியங்கண்டி கிராமத்தில் பழுதடைந்த வீடுகள் உயிர் பயத்தில் பழங்குடியின மக்கள்



பொள்ளாச்சி ,ஆக.3-

ஆனைமலை புலிகள் காப்பகத்தில் உள்ள பழங்குடியின மக்களின் தொகுப்பு வீடுகள் குடியிருப்பதற்கு தகுதியற்றதாக உள்ளதால் தினமும் மக்கள் உயிரை பணயம் வைத்து வசித்து வருகிறார்கள். புதிய குடியிருப்புகள் கட்டித்தர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆனைமலை புலிகள் காப்பக வனப்பகுதியில் பொள்ளாச்சி, உலாந்தி, வால்பாறை மற்றும் மானாம்பள்ளி ஆகிய வனச்சரகங்கள் உள்ளன. இவற்றில் வனப்பகுதியில் 17 பழங்குடியின கிராமங்களும், ஊராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில்48கிராமங்களும் உள்ளன. சுமார் 2,400 வீடுகளில் 8,000-க்கும் மேற்பட்ட பழங்குடியின மக்கள் வசிக்கின்றனர்.

இதில் ஆழியாறு, சின்னாறுபதி, புளியங்கண்டி, டாப்சிலிப், கோழிகமுத்தி, பழைய சர்க்கார்பதி, தம்மம்பதி, நாகரூத்து, சுள்ளிமேட்டுப்பதி உட்பட பல கிராமங்களில் 40 ஆண்டுகளுக்குமுன்பு அரசு சார்பில் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டன. பல பழங்குடியினகிராமங்களில் தொகுப்பு வீடுகள் சிதலமடைந்து உள்ளன. இதுவரையில் அரசு சார்பில் தொகுப்பு வீடுகள் புதுப்பிக்கப்படாமல் உள்ளன.

குறிப்பாக, கோட்டூர் பேரூராட்சிக்கு உட்பட்ட ஆழியாறு கிராமத்தில் புளியங்கண்டி பகுதியில் கான்கிரீட்மேற்கூரையுடன் கட்டப்பட்ட வீடுகளில் சிமென்ட் பூச்சு உதிர்ந்து பக்கவாட்டு சுவர்கள் விரிசலுடன் காணப்படுகின்றன. கான்கிரீட்மேற்கூரைகளில் மழைநீர் கசிவதால் நிம்மதி இழந்துள்ளனர். இந்நிலையில், சொந்த செலவில் தார்ப்பாலின் சீட் வாங்கி வீட்டின்மேற்கூரையில் அமைத்துள்ளனர்.

பழுதடைந்த வீடுகளுக்கு பதிலாக புதிய தொகுப்புவீடுகள் கட்டி தரவேண்டும் என பழங்குடியின மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். இது குறித்து அவர்கள் கூறும்போது,“ஆனைமலை தாலுகா கோட்டூர் பேரூராட்சிக் குட்பட்டது புளியங்கண்டி கிராமம். இப்பகுதியில் 200-க்கும் மேற்பட்ட பழங்குடியின மக்கள் மூன்று தலைமுறையாக வசித்து வருகிறோம்.

எங்களுக்கு கடந்த 2001-ம் ஆண்டில் தமிழக வனத்துறை சார்பில் 41 தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டன.தற்போதுஅந்த வீடுகளின் மேற்கூரையில் சிமென்ட் பூச்சு பெயர்ந்து விழுந்துகம்பிகள்வெளியே தெரிகின்றன. மேலும் வீடுகளின் சுவர்கள் வலுவிழந்து ஆபத்தான நிலையில் உள்ளன. எந்நேரமும் வீடுகள் இடிந்து விழும் தருவாயில் உள்ளதால் மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

புதிய தொகுப்பு வீடுகள் கட்டித்தரக்கோரி பழங்குடியினர் நலத்துறை, வனத்துறை,வருவாய்துறை அதிகாரிகளிடம் பலமுறை மனு அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மழைக் காலத்தில் வீடுகள் இடிந்து விழுந்து அசம்பாவிதம் நடைபெறும் முன்பு புதிய வீடுகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றனர்.

# கீழடியில் காவல் நிலையம் கட்ட தடை கோரியவருக்கு அபராதம்

## கலைஞர் நூலகத்துக்கு ரூ.15,000 வழங்க உத்தரவு



மதுரை ,ஆக.3-

கீழடியில் அரசு புறம்போக்கு நிலத்தில் காவல் நிலையம் கட்டுவதற்கு தடை கோரி மனு தாக்கல் செய்தவருக்கு உயர் நீதிமன்றம் அபராதம் விதித்தது.

சிவகங்கை மாவட்டம் கீழடியைச் சேர்ந்த கோட்டைச்சாமி, உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனு: ’கீழடி கிராம தலைவராக இருந்து வருகிறேன். இங்கு பழமையான அய்யனார் கோயில், அம்மன் கோயில், ஈஸ்வரன் கோயில் மற்றும் வெள்ளைப்பிள்ளையார் கோயில்கள் உள்ளன. இக்கோயில்களை கீழடி கிராமத்தைச் சேர்ந்த 8 கரைகாரர்கள் பராமரித்து வருகின்றனர். இங்கு அய்யனார் கோயில் களம் புறம்போக்கு இடத்தில் உள்ளது. கோயில் அருகே களம் புறம்போக்கு நிலத்தில் காவல் நிலையம் கட்டுவதற்கு தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இங்கு காவல் நிலையம் கட்டினால் கோயில் திருவிழா மற்றும் பொதுமக்கள் கூடுவதில் இடையூறு ஏற்படும்.

இதனால் அய்யனார் கோயில் அருகே காவல் நிலையம் கட்டும் திட்டத்தை கைவிடக்கோரி சிவகங்கை மாவட்ட ஆட்சியர்,மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சியர் ஆகியோருக்கு மனு அளித்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. கோயில் அருகேயுள்ள களம் புறம்போக்கு நிலத்தில் 300 ஆண்டுகளுக்கு மேலாக நெல் சேமிப்பு மற்றும் நெல் உலர்த்துதல் பணிகளும், கோயில் திருவிழாக்களும் நடைபெறும். அந்த இடத்தை ஆக்கிரமித்து காவல் நிலையம் கட்டுவது சரியல்ல. எனவே, களம் புறம்போக்கு நிலத்தில் காவல் நிலையம் கட்டுவதற்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும்’ என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், டி.பரத சக்கரவர்த்தி ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அரசு வழக்கறிஞர் வாதிடுகையில், ’’அய்யனார் கோயில் இடம் அரசு பதிவேட்டில் புறம்போக்கு நிலம் என வகைப்படுத்தப்பட்டு உள்ளது. புறம்போக்கு நிலத்தில் தேவைப்படும் பணிகளை மேற்கொள்ள அரசுக்கு உரிமை உள்ளது. எனவே, அந்த இடத்தில் காவல்நிலையம் கட்ட அனுமதிக்க வேண்டும்’’ என்றார்.

இதையடுத்து நீதிபதிகள், ’’அரசு புறம்போக்கு நிலத்தை அரசு என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். மனுதாரருக்கு ரூ.15 ஆயிரம் அபராதம் விதிக்கப்படுகிறது. இப்பணத்தை மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலக வங்கி கணக்கில் செலுத்த வேண்டும். மனு தள்ளுபடி செய்யப்படுகிறது’’ என உத்தரவிட்டனர்.



தென்காசி மாவட்டம் தனியார் மஹாலில் புதிய தமிழகம் கட்சி நிறுவனத் தலைவர் கிருஷ்ணசாமி தென்காசி மாவட்டத்திற்கு புதிய மாவட்டச் செயலாளர்கள் நியமனம், மேலும் கட்சியை வலுப்படுத்தவும் கட்டமைப்புகளை சீர் செய்யவும் 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றி பெறுவதற்காகவும் தென்காசி மாவட்டத்திற்கு மூன்று மாவட்டச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆலங்குளம்,சங்கரன்கோவில்,அ. ராசையா, வாசுதேவநல்லூர் சாமிதுரை, தென்காசி தெற்கு இரா. கிருஷ்ணாபாண்டியன் போன்ற நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் மேலும் மது ஒழிப்பு போராட்டத்திற்கு சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்திடம் பேசி போராட்டத்திற்கு அழைத்து வருவதாக புதிய தமிழகம் கட்சி நிறுவனர் கிருஷ்ணசாமி பேட்டியின் போது தெரிவித்தார், அப்போது அவருடன் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி மகளிர் மேம்பாட்டு குழு சார்பாக சிறப்பு சொற்பொழிவு



மதுரை,ஆக.3-

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி மகளிர் மேம்பாட்டு குழு சார்பாக "தடைகளை தகர்ப்போம்" என்ற தலைப்பில் சிறப்பு சொற்பொழிவு மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சி, நமது மூர்த்தி நாயுடு ஆண்டாள் அம்மாள் அரங்கில் நடைபெற்றது. வரவேற்புரையை இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் தமிழ்த்துறை தலைவர் தி. பரிமளா வரவேற்புரை வழங்கினரர்.

இந்நிகழ்விற்கு மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியின் தலைவர், பொறியாளர். எஸ். ராஜகோபால் தலைமையுரை வழங்க, செயலாளர் .எம். விஜயராகவன் முன்னிலை வழங்கினார், பின்னர் கல்லூரி முதல்வர் ஏ .ராமசுப்பையா மற்றும் சுயநிதி பிரிவு இயக்குனர். சி .பிரபு வாழ்த்துரை வழங்கினார் .நிகழ்வின் அடுத்த கட்டமாக சிறப்பு அழைப்பாளர் ஜேனட் வசந்தகுமாரி (எம் எஸ் செல்லமுத்து அறக்கட்டளை மற்றும் ஆய்வு நிறுவனத்தின் ஆலோசனை இயக்குனர் ) பெண்களுக்கான உணர்வு சார்ந்த தடைகள், அதை எதிர் கொள்ளும் முறை மற்றும் மனதளவிலும், உளவியல் ரீதியாகவும், உறுதியாக இருத்தல் தொடர்பாக கலந்துரையாடல் மற்றும் விளக்கங்களை வழங்கினார்.

மேலும் மாணவிகள் எழுப்பிய வினாக்களுக்கு, கேள்வி பதில் முறையில் லலிதா பிரஜ்னா , சர்மிளா சிராஜ் மற்றும் திவ்யா ராமு ஆகியோர் பதில் வழங்கினர். இந்நிகழ்வினை எஸ். ராஜாமணி தொகுத்து வழங்கினார், எல். மிருனாளினி நன்றியுரை வழங்கினார், எஸ். ரிஸ்வானா பர்வீன் மற்றும் ராஜாமணி ஒருங்கிணைத்தனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# என்எல்சி சேதப்படுத்திய பயிர்களுக்காக ஏக்கருக்கு 40,000 இழப்பீடு

# கீழடியில் காவல் நிலையம் கட்ட தடை கோரியவருக்கு அபராதம்





# பொதுப் பாடத்திட்டத்தை மாற்ற உயர்கல்வித்துறைக்கு அதிகாரம் உள்ளது

புதுமை
# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

நான்காம் கிருஷ்ணராஜ உடையார் , மைசூர் மன்னர் (பி.1884) (இ.1940)



மைதிலி சரண் குப்த் , இந்தியக் கவிஞர், எழுத்தாளர் (பி.1886) (இ.1964)



ஸ்ரீ பிரகாசா , விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், அரசியல்வாதி (பி.1890) (இ.1971)



கோபால் சர்மா , இந்தியத் துடுப்பாட்ட வீரர் (பி.1960)



## இன்றைய நினைவு நாள்

தேவதாஸ் காந்தி , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1900) (இ.1957)



என். வி. நடராசன் , தமிழக அரசியல்வாதி (பி.1912) (இ.1975)



சுவாமி சின்மயானந்தா , வேதாந்த தத்துவத்தைப் பரப்பிய இந்திய ஆன்மிகவாதி (பி.1916) (இ.1993)

